**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**முன்னிலை: திரு. C.ஜெயபிரகாஷ், M.Com.,M.L.,**

**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்.**

**2025–ஆம் வருடம் ஜுலை மாதம் 07 ஆம் நாள் திங்கட்கிழமை**

**I.A.No.766/2024**

**in**

**Original Suit No.198/2022**

**(CNR.No.TNDG19-000508-2022)**

செந்தில்குமார் ... மனுதாரர்/2 ம் பிரதிவாதி

/எதிர்/

1. கைருன்னிசா
2. கே.கலீல்ரஹ்மான் ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இந்த மனுவானது கடந்த 04.11.2023 ம் தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 13.12.202 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்னர் கடந்த 04.07.2025 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.நாட்டுத்துரை அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.G.சபிதா அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனைக்குட்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கலான,

**உத்தரவு**

**1.** இம்மனுவானது மனுதாரர்/2 ம் பிரதிவாதிக்கு எதிராக கடந்த 21.02.2023 ஆம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச தீர்ப்பாணையை

ரத்து செய்து, அசல் வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுக்க உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 பிரிவு 13 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:—</u>

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி. எதிர்மனுதாரர்கள்/வாதிகள், மனுதாரர்/2ம் பிரதிவாதிக்கு எதிராகவும், 1, 3 பிரதிவாதிகளுக்கு எதிராகவும் அசல் வழக்கை தாக்கல் செய்து வழக்கினை மேல்நடத்தி வந்துள்ளார். வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலத்திலிருந்து மனுதாரர்/2ம் பிரதிவாதி மகாராஷ்ட்ரா மாநிலத்தில் வேலை பார்த்து வந்ததில், மனுதாரது/2ம் பிரதிவாதியின் தகப்பனாரே வழக்கினை மேல்நடத்தி வந்துள்ளார். தற்பொழுது அசல் வழக்கானது இந்நீதிமன்றத்திற்கு மாறுதலான பின்பு விசாரணைக்கு வாய்தா போடப்பட்டதில் கடந்த 21.02.2023ம் தேதிக்கு முன்பு மனுதாரர்/2ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு உடல் நலக்குறைபாடு ஏற்பட்டு மருத்துவமனைக்கு சென்றதில் மஞ்சள் காமாலையால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்ததால், மனுதாரர்/2ம் பிரதிவாதி கடந்த 2 ஆண்டுகளாக சேலத்தில் வேலை பார்த்து வரும் இடத்தில் மனுதாரர்/2ம் பிரதிவாதியின் தகப்பனாரை அழைத்துச் சென்று நாட்டு வைத்தியம் பார்த்தது வந்ததினால், 21.02.2023ம் தேதியில் விசாரணைக்கு ஆஜராக இயலாமல் போனதினால் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் 21.02.2023ம் தேதியில் மனுதாரருக்கு ஆஜராகவில்லை என்று எழுதிக்கொடுத்ததன் பேரில், 21.02.2023ம் தேதி ஒருதலைபட்சப்படுத்தப்பட்டு, அதன் பின்னிட்டு கடந்த 22.06.2023ம் தேதியில் மனுதாரருக்கு எதிராக இந்நீதிமன்றத்தால் ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அசல் வழக்கில் மனுதாரர்/2ம் பிரதிவாதிக்கு நல்ல எதிர்வாதம் உள்ளது. மனுதாரர்/2ம்

பிரதிவாதியின் தகப்பனாருக்கு ஏற்பட்ட உடல்நலக்குறைவினால் 21.02.2023 ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கினை மேல்நடத்த முடியாமல் போனது வேண்டும் என்றே ஏற்பட்டதல்ல. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தாவா சொத்தினை மனுதாரர்/2 ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த பின்பு மோசடியாக ஆவணத்தினை உருவாக்கி, வழக்கினை தாக்கல் செய்துள்ளதால், கடந்த 22.06.2023 ம் தேதியில் ஏற்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்து அசல் வழக்கினை மீண்டும் விசாரணைக்கு எடுக்க உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** மனுதாரர்/2 ம் பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய அம்சம் யாதெனில் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதை முடிவு செய்ய வேண்டிய பிரச்சனையாகும்.

**4.1.** மனு, பிரமாணப்பத்திரிக்கை கவனமாக பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்து பார்க்கும் போது, அசல் வழக்கானது முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பித்து, அதன் தன்மைப்படி இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கடந்த 11.06.2013 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1 மற்றும் 3 பிரதிவாதிகள் அழைப்பாணையை பெற்றுக் கொண்டு முன்னிலையாகாத காரணத்தினால் கடந்த 12.07.2013 ம் தேதி ஒருதலைபட்ச நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். 2 ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாதநிலையில் கடந்த 04.08.2014 ம் தேதி ஒருதலைப்பட்ச

நிலைக்குட்படுத்தப்பட்டு, பின்னிட்டு இ.ம.எண்.68/2016 என்ற உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7ன் கீழான மனுவினை தாக்கல் செய்து, மேற்படி மனுவானது கடந்த 27.06.2017ம் தேதி அனுமதிக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணை நிலையில், இருந்த போது 21.07.2019ம் தேதி 3ம் பிரதிவாதி இறந்துவிட்டதாக திறந்த நீதிமன்றத்தில் கடந்த 12.10.2022ம் தேதி குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு, குறிப்பாணை பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், வாதிகள் தரப்பில் 2ம் வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்து, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.1 என்பவரை 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை மேற்கொள்ள முன்னிலையாகாத நிலையில் கடந்த 21.02.2023ம் தேதி 2ம் பிரதிவாதி ஒருதலைபட்ச நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். பின்னிட்டு வாதிகள் தரப்பு சாட்சிய விசாரணை முடிவுற்ற பிறகு கடந்த 22.06.2023ம் தேதி இவ்வழக்கில் தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**4.2.** கடந்த 22.06.2023ம் தேதி ஒருதலைபட்சமாக தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால், உரிய நேரத்தில் 2ம் பிரதிவாதி தரப்பில் ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய மனு தாக்கல் செய்யாத நிலையில், 104 நாட்கள் காலதாமத்துடன் இ.ம.எண்.95/2024 மனுவானது தாக்கல் செய்யப்பட்டு, செலவு தொகையுடன் கடந்த 21.11.2024ம் தேதி மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. இ.ம.எண்.94/2024 மனுவில் நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட செலவுத் தொகையை வாதிகள் தரப்பில் பெறப்பட்டுள்ளது. அதற்கான குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.3.** ஏற்கனவே, இ.ம.எண்.95/2024 காலவறையறை சட்டம் பிரிவு 5ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டுள்ளதால் இம்மனுவானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிர்மனுஉரை தாக்கல் செய்ய கடந்த 28.03.2025ம் தேதி

வழக்கு இருந்தநிலையில், வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்குரைஞரால் அதிகபடியான செலவுத்தொகையுடன் மனுவினை அனுமதிக்க வேண்டும் என்று குறிப்பு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் அனைத்து சூழ்நிலைகளையும் ஒருங்கிணைப்பாக பரிசீலனை செய்து பார்க்கும் போது, அசல் வழக்கானது கடந்த 11.06.2013 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்திற்கு 23.12.2021 ம் தேதி வழக்கு அ.வ.எண்.198/2022 என்ற எண்ணில்கோப்பிற்கு எடுக்கப்பட்டு, சுமார் 12 ஆண்டு காலமாக அசல் வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. வாதிகள் தரப்பில் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 26 விதி 13 ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இம்மனுவினை அனுமதிக்க ஆட்சேபனை இல்லை என்று குறிப்பு செய்திருந்தபோதிலும், வாதிகளுக்கு வழக்கை நடத்த அதிகப்படியான காலவிரையம் ஏற்பட்டுள்ளது. இந்நீதிமன்றத்தால் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்யும் சமயத்தில் அசல் வழக்கில் தீர்வு காண வாதிகளுக்கு மேலும் காலதாமதம் ஏற்படும் என்பது மிக தெளிவாகிறது. இந்நிலையில், ஏற்கனவே இ.ம.எண்.95/2024 மனுவானது அனுமதிக்கப்பட்டுள்ள நிலையிலும், வாதிகள் தரப்பில் செலவு தொகை வேண்டி குறிப்பு செய்துள்ள நிலையில், இம்மனுவினையும் செலவுத் தொகையுடன் அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**5. முடிவில்,**

மனுதாரர்/2 ம் பிரதிவாதி இம்மனுவின் செலவுத் தொகையாக ரூ.2,000/- தொகையினை எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு எதிர்வரும் **15.07.2025** ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும்,

தவறும்பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. மீண்டும் அழைக்க **17.07.2025**.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் வருடம் ஜூலை மாதம் 07ம் நாள் என்னால் இந்நீதிமன்ற அவையில் பகரப்பட்டது.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.07.07 18:54:00 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்.**

| | |
|---|---|
| மனுதாரர் /2ம் பிரதிவாதி தரப்பு சாட்சிகள் | : இல்லை. |
| மனுதாரர் /2ம் பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் | : இல்லை |
| எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் | : இல்லை |
| எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் | : இல்லை. |

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.07.07 18:54:04 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்.**